# காரைநகர் கடற்படை தளம் மீது புலிகள் தாக்கு; சிப்பாய் பலி!


விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 12 இதழ் 111
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 26 - 5 - 1995


(கொழும்பு)
காரைநகர் கடற்படை முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு கடற்படை சிப்பாய் பலியானதாக பாதுகாப்பு அமைச்சின் தலைமைச் செயலகம் நேற்று அறிவித்தது.
நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் படகுகளில் வந்து காரைநகர் கடற்படை முகா

(5-ம் பக்கம் பார்க்க)

## புலிபாய்ந்தகல் பகுதியில் 3 படையினர் பலி

[மட்டக்களப்பு]
மட்டக்களப்பு புலி பாய்ந்தகல் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் அரச துருப்புக்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டதாக இராணுவ உயர் அதிகாரிகள் நேற்றுத் தெரிவித்தனர்.

(5-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தமிழர் திட்டமிட்டுக் கொலை

[கொழும்பு]
மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய பகுதிகளில் இராணுவத்தினரும், முஸ்லிம்களும் திட்டமிட்டு தமிழர்களை படுகொலை செய்து வரும் சம்பவங்கள் நாளுக்கு

[5-ம் பக்கம் பார்க்க]

# யுத்தம் காரணமாக அதிகரித்துள்ள பாதுகாப்பு செலவை சமாளிக்க புதிய வரிகள் அமுலுக்கு வரும்!

## அமைச்சர் பீரிஸ் தகவல்

(கொழும்பு)
விடுதலைப்புலிகளுக்கு எதிராக யுத்தம் ஏற்பட்டுள்ளதால் பாதுகாப்புச் செலவுகள் அதிகமாகியுள்ளன. இதனைச் சமாளிப்பதற்கு புதிய வருமானவரிகளை அமுல்செய்ய வேண்டிய நிலைக்கு அரசாங்கம் இப்போது தள்ளப்பட்டிருக்கிறது. நீதி, மற்றும் அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

[6-ம் பக்கம் பார்க்க]

## புலிகளின் ஏவுகணை தாக்குதலை தடுக்கவே ஊரடங்கு பிரகடனம்

(கொழும்பு)
விடுதலைப்புலிகள் தரையிலிருந்து வானை நோக்கி ஏவுகணைத் தாக்குதல் நடாத்துவதைத் தடுக்கும் வகையிலேயே ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டிருக்கலாமென பி. பி. சி. நேற்று தெரிவித்தது.
பி.பி.சி, இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்: விடுதலைப் புலிகள் தினமும் குறிப்பிட்ட 7 கிராமப் பகுதிகளிலிருந்தும் தாக்குதல் தொடுத்து வருகின்றனர்.
குறிப்பிட்ட 7 கிராமங்களும் பலாலி இராணுவ முகாமை சூழவுள்ள பகுதிகளில் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (சு இ)

## தொண்டமானாறு உட்பட ஏழு பகுதிகளில் ஊரடங்கு

[யாழ்ப்பாணம்]
கெருடாவில், தொண்டமானாறு- உடுப்பிட்டி, இடைக்காடு, அச்சுவேலி, புத்தூர் மேற்கு, வசாவிளான் ஆகிய பிரதேசங்களில் நேற்று மாலை 6 மணியிலிருந்து இன்று காலை 6 மணிவரை, மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டிருப்பதாக பலாலி இராணுவ முகாலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் பருத்தித்துறை, வல்லை, யாழ்ப்பாண வீதியைப் போக்குவரத்திற்கு உபயோகிக்கவேண்டாம் எனவும், கொடிகாமம். சரசாலை வீதியை யாழ்ப்பாணத்துடனை போக்குவரத்திற்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலி பகுதி மக்கள் இடம்பெயர்வு

(கோப்பாய்)
அச்சுவேலி மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மூட்டை முடிச்சுகளுடன் தங்கள் இருப்பிடங்களை விட்டு இடம்பெயரத்தொடங்கியுள்ளனர்.
இதனால் இப்பகுதிகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.
இடம்பெயர்ந்த மக்கள் புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி, ஆவரங்கால் சிவன் கோவில், நீர்வேலி மாதா கோவில் போன்ற இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.
-இ-166-90

## பலாலி இராணுவ முகாமில் உணவுத் தட்டுப்பாடு நிலவுகிறது!

### மேஜர் ஜெனரல் சிறீலால் வீரசூரிய தகவல்

(கொழும்ப)
பலாலி இராணுவ முகாமில் புதிய உலர் உணவுவகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.
பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் சிறீலால் வீரசூரிய நேற்று இவ்வாறு ரூபவாஹினிக்கு தெரிவித்தகர்.
அவர் ரூபவாஹினிக்கு மேலும் தெரிவித்ததாவது-
விடுதலைப் புலிகள் எமது விமானங்களை தாக்கிய பிறகு

[6ம் பக்கம் பார்க்க]

## வளலாயில் பொதுமக்கள் நால்வர் படையினரால் கைது

[யாழப்பாணம்]
வளலாய் பகுதியில் நான்கு பொதுமக்களை இராணுவம் நேற்று கைது செய்துள்தாக தெரிய வந்துள்ளது.
நேற்றுக் காலை வளலாய் பகுதியில் தமது வயல்களைப் பார்வையிடச் சென்ற நாலு பொதுமக்களை அங்கு பதுங்கியிருந்த இராணுவத்தினர் பிடித்து தம்முடன் கூட்டிச் சென்றுவிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன. வி இ

## இலங்கைக்கு இந்தியா இராணுவ உதவிகளை வழங்கக் கூடாது

### தி. மு. க. தீர்மானம் நிறைவேற்றியது

(சென்னை)
இந்திய அரசு இராணுவ உதவிகளை அளிக்கக் கூடாது என்றும் அங்கு இராணுவ ரீதியில் தலையிடக் கூடாது என்றும் திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகக் குழு நேற்று சென்னையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.
அந்தத் தீர்மானத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: இலங்கையில் தமிழ் மக்களின் துன்பங்கள் நீங்கவும், அமைதி நிலவவும் மற்ற நாடுகளின் அரசுகள் அக்கறை காட்ட வேண்டும்'' என்று கூறப்பட்டுள்ளது. ம-இ

## இந்திய உதவி ஆபத்தை ஏற்படுத்தும்

(புதுடில்லி)
இலங்கைக்கு இராணுவ ரீதியில் இந்தியா உதவுமானால், அது ஆபத்தான ஒரு நிலையைத் தோற்றுவிக்கும் என்று இந்தியாவின் எதிர்க்கட்சிகளில் ஒன்றான பாரதிய ஜனதாக்கட்சி இந்திய அரசை எச்சரித்துள்ளது.
பாரதீய ஜனதாக்கட்சி இது பற்றி மேலும் தெரிவிக்கையில்: பாக்கு நீரிணையில் இலங்கை கடற்படையின் நடமாட்டம் அதிகரிப்பதால், இது இந்தியாவுக்கு ஒரு அச்சுறுத்தலாக அமையும் என்றும் கூறப்பட்டுள்ளது. ம-இ


## அஞ்சலகம் இடமாற்றம்

(வடமராட்சி)

தொண்டைமானாறுப் பகுதியை நோக்கி வளலாய்ப் பகுதியிலிருந்து இராணுவத்தினர் மேற்கொள்ளும் ஷெல் தாக்குதல் காரணமாகத் தொண்டைமனாறு அஞ்சலகம் இடம் மாறியுள்ளது.

மேற்படி அஞ்சலகம் கடந்த 20ம் திகதி முதல் தற்காலிகமாக வல்வெட்டித்துறை அஞ்சலகத்தில் செயற்படுகின்றது. 51

# நினைவு கூருகின்றோம்



அன்னை மடியில்:
28 - 03 - 1908

இறைவனடியில்:
06 - 06 - 1994


அமரர்
## வேலுப்பிள்ளை தில்லையம்பலம்
(Retired Chief Revenue Inspector)

பதுளை சரஸ்வதி வித்தியாலயத்தின் பிரதம ஸ்தாபகரும், கதிர்காமம் தெய்வானை அம்மன் கோயில், மாணிக்கப் பிள்ளையார் கோயில், முத்துலிங்க சுவாமி கோயில், செல்வக் கதிர்காமம் ஆகிய ஸ்தலங்களின் நிர்வாகக் குழுவின் முன்னாள் செயலாளரும், புல்மோட்டை முருகன் கோயில் ஆரம்பிப்பாளரும், மாத்தறை சிறீ கதிரேசன் கோயில் முன்னாள் கௌரவ முகாமையாளரும், செல்வச் சந்நிதி கோயில் சந்தணத் தொண்டு செய்தவருமான அமரர் வேலுப்பிள்ளை தில்லையம்பலம் அவர்களை நினைவுகூருகின்றோம்.

தலைவர்,
தில்லையம்பலம் ஞாபகார்த்த
திருப்பணி
தர்மகத்தா சபை.

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு. (சி-1487)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



உயர்திரு
## வேலுப்பிள்ளை தில்லையம்பலம்
(Retired Chief Revenue Inspector)

அன்னை மடியில்: 28 - 03 - 1908
இறைவன் அடியில்: 06 - 06 - 1994
திதி: 26 - 05 - 1995

இன்று வதிரி ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமத்தில் நடைபெறும் விசேஷ சாந்தி திதி நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள், மற்றும் பெருமக்கள்,
மருமக்கள். மைத்துனிமார்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தொண்டைமானாறு.

(சி-1486)

## இன்று

[யாழ்ப்பாணம்]

கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியின் , தனிநாயகம் தமிழ மன்றம், நடாத்தும் தமிழ் விழா இன்று 26ம் திகதி வெள்ளிக்கிழமை பிப 4மணிக்கு இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக அரச அதிபர் க, பொன்னம் பலம் கலந்து கொள்வார்.

0 0

[யாழ்ப்பாணம்]

செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலய வருடாந்த திருநாளை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை யாழ் பஸ் நிலையத்திலிருந்தும் பருத்தித்துறையிலிருந்தும் விசேட போக்குவரத்துச் சேவைமாலை 3-00 மணிக்கு நடைபெறும்.

0 0

[உடுவில்]

மகளிர் அபிவிருத்தி நிலைய ஆதரவுடன் சித்தங்கேணி ஜனசக்தி சன சமூக நிலையம் நடத்தும் அபிவிருத்திக் கருத்தரங்கு ஜனசக்தி சன சமூக நிலைய மண்டபத்தில் இன்று 26ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு நடைபெறும். 109

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995–05–26**

வெள்ளி இரவு

8-02 கலை மஞ்சரி-நிகழ்ச்சியில் முதலில் அறிமுகம் - அறிமுகமாகுபவை "உலக உலா சஞ்சிகையின் மே மாத இதழ்", "சட்டத்தின் திறவுகோல்" சஞ்சிகையின் முதல் இதழ அறிமுகத்தையடுத்து சிறுகதை - செல்வி சோ. வசந்தபிறேமினி எழுதிய "வீரம் பிறக்கின்றது" சிறுகதையைத் தொடர்ந்து கவிதை — வானொலி 4-ல் 3-வது பரிசு பெற்ற நிலா தமிழின் தாசன் எழுதிய "தாயகத்தை நேசி" ஆகியன கலைமஞ்சரியை அலங்கரிக்கும்.
8-25 கணப்பொழுது சி கண்ணம்மா எழுதிய 'மேஜர் இளங்கோ'.
8-30 செய்திகள்
8-40 அரசியல் அரங்கம் - வே. பாலகுமாரன் எழுதிய "இயற்கை விதிக்கும் மரண தண்டனை"
8-50 ஏர்முனை நிகழ்ச்சியில் "சிறுதானியம செய்வோம்" குறு நாடகம்.

**1995–05-27**

சனி காலை

7-02 மாவீர வணக்கம்
7-15 நீங்கள் கேட்டவை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச் செய்திகள்
7-40 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995–05–26**

வெள்ளி மாலை

5-01 சிந்தனைச் சிதறல்
5-02 எழுச்சிக் கீதம்
5-10 புதியவை
5-15 கணநேரக் காவியங்கள்
5-30 மண்ணின் குரல்
5-40 நேயர் கடிதங்கள்
5-45 வெற்றிச் சுவடுகள்
6-00 சிந்தனைக்குச் சில விநாடிகள்.
6-02 நாடகம் - "பொம்பிளை பார்க்கப் போறம்" அங்கம் - 3
6-25 என் தெரிவு
6-30 நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

## வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

# விடுதலைப் புலிகளுக்கு தமிழகத்தில் ஆதரவு அலை

[சென்னை]

யாழ்ப்பாணத்தில், விடுதலைப்புலிகள், இராணுவத்தின் இரு விமானங்களை சுட்டு வீழ்த்தியதினுல் தமிழகத்தில் விடுதலைப் புலிகளுக்கு மக்களின் ஆதரவு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

புலிகள் விமானங்களை சுட்டு வீழ்த்திய செய்திகளை தமிழகத்தில் உள்ள பத்திரிகைகள் அனைத்தும் முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிட்டன.

"விடுதலைப் புலிகள் தமிழீழத்தை அமைத்து விடுவார்கள்" என்று தமிழக மக்கள் தற்போது கதைக்கத் தொடங்கியுள்ளார்கள்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பின்பு வீழ்ச்சி அடைந்திருந்த விடுதலைப் புலிகளின் ஆதரவு அலைகள், விமானத்தை சுட்டு வீழ்த்தியன்திறுல் மீண்டும் அதிகரித்துவருவதாக, செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன வி - ரி

## தராசுப் படிகளுக்கு முத்திரையிடல் ஆரம்பம்

(கொழும்புத்துறை)

யாழ் செயலகத்தில் யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட சந்தை, கடை, வெதுப்பகம், விறகு காலை உரிமையாளர்கள் தங்கள் நிறுவைகள், அளவைகள், கருவிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நேற்று புதன் கிழமை தொடக்கம் 31 ஆம் திகதி புதன்கிழமை வரையும் யாழ் செயலக நிறுவைகள். அளவைகள் திணைக்களத்தில் காலை 8. 30 மணிமுதல் பிற்பகல் 2. 30 மணிவரை நிறுவைகள் அளவைகள், உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கல்வியங்காடு, பாஷையூர், சின்னக்கடை,, பெரியகடை, நாவாந்துறைச் சந்தை வியாபாரிகளும், மற்றும் மில், அரிசியாலை உட்பட சகல வியாபாரிகளும் தவறாது தமது நிறுவைகள், அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிட்டுக் கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது

154 - சி

# 13 தமிழ்க் கலைஞர்களுக்கு கலாபூஷணம் விருது

[கொழும்பு]

நாதஸ்வர வித்துவான் கே. எம். பஞ்சாபிகேசன் பொன் சுந்தரலிங்கம், எஸ். வேலானந்தன் ஆகியோர் உட்பட 13 தமிழ் கலைஞர்கள் கலாபூஷனம் விருதைப் பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இவ் விருதுகளை இந்துசமய கலாசார திணைக்களம் வழங்கவுள்ளது. 10 ஆயிரம் ரூபா பரிசும் சான்றிதழும் விருது பெறும் ஒவ்வொருவருக்கும் வழங்கப்படவுள்ளது.

விருது பெறும் ஏனையோர் விபரம் வருமாறு சி. பத்மலிங்கம் [யாழ்ப்பாணம் வாய்ப்பாட்டு], ஆர். சந்தான

(5ம் பக்கம் பார்க்க)

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் அ. பொ. சண்முகராஜா
(Dimon Tea Proprietor)

மண்ணில்: 20 - 10 - 1939
விண்ணில்: 10 - 06 - 1991
திதி: 26 - 05 - 1995

எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து நான்கு ஆண்டு காலம் ஓடி மறைந்தாலும் இன்னும் எம் நெஞ்சில் சிரஞ்சீவியாக வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும் :

அன்பு அம்மா, மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், சகோதரிகள்,
குடும்பத்தினர்கள்.

இல, 39/19, (10) மின்சார நிலைய வீதி,
3-ம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (சி-1485)

# இந்தியப் படை வருமானால் அதுவரவேற்கத்தக்கவிடயம்

## தினேஸ் கூறுகிறார்

(கொழும்பு)

இந்தியப் படை இலங்கைப் படையினருக்கு உதவ இலங்கை வருவார்களேயானால் அது வரவேற்கத்தக்க விடயமாகும் என மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்,

விடுதலைப் புலிகளின் கை ஓங்கி வருவதாலும் அவர்கள் வசம் விமான எதிர்ப்பு ஏவுகணை உட்பட நவீனரக ஆயுதங்கள் இருப்பதாலும் இலங்கைப் படையினருக்கு இந்தியப் படையினரின் உதவி தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை உள்நாட்டு பிரச்னைக்கு அரசியல தீர்வை காணுமாறும் வெளிநாட்டு படையை இங்கு அழைப்பதன் மூலம் நாட்டுப் பிரச்னை மோசமடையுமே தவிர இந்தப் பிரச்னையை தீர்க்க முடியாதென பல கட்சிகளும் அரசை வற்புறுத்தியுள்ளன.

எனினும் இலங்கைப் பிரச்னையில் இந்தியா இனி ஒரு போதும் இராணுவ ரீதியில் தலையிடாதென கூறியுள்ளதும் தெரிந்ததே. -சி

## எரிபொருளுக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

மேற்படி சங்கத்திற்கு ஏப்ரல், மே மாதங்களுக்கான கோட்டா மண்ணெண்ணை வந்து சேராததால், எரிபொருட்கள் முடியும்தறுவாயில் இருப்பதாகச் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் சிங்கராயர் தெரிவித்தார்.

எரிபொருள் முடிந்தால் சங்கத்தின் வாகனச் சேவை பாதிக்கப்படலாம் எனச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

170 சி

## மணிவாக்கு

சாதி, குலம் பிறப்பு என்னும் சுழிகளில் சிக்குண்டு அல்லல் உறுதீர்கள். சேதத்தைவிட்டு உருவங்களில் வேறுபாடு கருதாது நான் எனது என்னும் சொற்களை விட்டால் இறை வணங்கிய அழகனைக் காணலாம்.

— திருவாசகம்

## நமது நோக்கு

### வெல்வதுஎளிதா?

''விடுதலைப் புலிகளைப் போரில் வெல்வது முடியாத விசயம். எதியோப்பியா போன்ற நாடுகளில் போரினால் நாடு பிளவுபட்டன என்பதே உண்மையாகும்!''

சண்டே லீடர் பத்திரிகையில் இவ்வாறு கருத்து கூறியுள்ளார் அட்றியன் விஜயமான.

சமாதானப் பேச்சுகள் நடந்த போதும் படையினரைப் பாதிக்கும் செயலில் ஈடுபடவில்லை என ஜனாதிபதி தொலைக்காட்சி உரையில் தெளிவுபடக் கூறியுள்ளார்.

அதாவது - சமாதானம் என்று கூறிக் கொண்டு யுத்த நடவடிக்கைகளை முடுக்கிவிடுவதில் அவர் பின்வாங்கவில்லை.

அது மாத்திரமல்ல - இராணுவத் தீர்வில்தான் நம்பிக்கை வைத்துச் செயற்படுவதும், பிறநாட்டு உதவிகளையும் ஆயுதத் தளபாடங்களையும் வாங்கிக் குவித்து யுத்த பயப் பீதியை வளர்த்து வருவதையும் நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது.

இந்த வேளையில் - விஜேயமானவின் கருத்தும் ஆலோசனையும் அதிமுக்கியத்துவமானது.

ஏனெனில் - நிமிடத்திற்கு நாற்பத்தோராயிரம் போருக்காகச் செலவு செய்து கொண்டு, மேலும் படையினரை உற்சாகப்படுத்தி, வெல்ல முடியாத போர்ச் சிந்தனையில் ஜனாதிபதி மூழ்கிவிட்டார்.

சமாதானத்தை ஏற்படுத்தியே தீருவேன் என்று கூறி, முன்னைய ஆட்சியில் படையினரின் அடாவடித்தனங்களை அம்பலப்படுத்தி மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சிக்கு வந்த அம்மையார், இன்று திக்குத் தெரியாத காட்டில் காலடி வைத்திருக்கிறார்.

தமிழ்ச் சமுதாயத்தின் வீரத்தையும், அவர்களின் நீதியான கோரிக்கைகளையும் தவறாக எடைபோட்டுவிட்ட அம்மையார் நிச்சயம் தோல்வி காண்பார்.

ஏனெனில் - யுத்தத்தால் நாட்டின் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சி காணப் போவதோடு, தெற்கிலும் பாதிப்புகள் ஏற்பட்டு மக்கள் வேதனை அதிகரிக்கப் போகின்றது.

ஏற்கனவே ஜே. ஆர்., லலித் போன்றோர் எடுக்காத போர் முயற்சியையா அம்மையார் எடுக்கிறார்.

சிங்கள அறிஞர் உணர்த்திய உண்மையை எவ்வளவு விரைவாக ஜனாதிபதி உணர்கிறாரோ அவ்வளவுக்கு நாட்டின் அழிவு தடுக்கப்படும்[

# பாதிக்கப்படும் மக்களுக்கு உதவ பிரதேச ரீதியில் முன்னோடி ஏற்பாடு

[யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அனர்த்தங்கள் ஏற்படும் பட்சத்தில் பாதிக்கப்படும் மக்களை பாதுகாத்து நிவாரணங்களை வழங்குவதற்கான முன்னோடி ஏற்பாடுகளை யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் துரிதகதியில் மேற்கொண்டு வருகின்றன.

அனர்த்தங்களால் பாதிக்கப்படும் மக்களுக்கு தங்குமிட வசதி நிவாரணம் போன்றவற்றை வழங்குவதற்கு அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியையும் பிரதேச செயலகங்கள் நாடியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் இதுபற்றி கலந்துரையாடல், கூட்டங்கள் இடம் பெற்று வருகின்றன;

இக்கலந்துரையாடல்களில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தமது அபிப்பிராயங்களை தெரிவித்துவருகின்றனர்.

இதன் பிரகாரம் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் குறிக்கப்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்கு உதவும் நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்துவர்.

பிரதேச செயலகங்களும் இத்தகைய பணிகளில் ஈடுபடவுள்ளன. 170-ரி

# மட்டக்களப்பிற்கு பொருட்களை எடுத்துச்செல்ல படையினர் தடை?!

(மட்டு. நகர்)

மட்டக்களப்பிற்கு அத்தியாவசிய பொருட்களை கொண்டு செல்வதற்கு படையினர் தடைகளை ஏற்படுத்தி வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொருட்கள் கொண்டு செல்வதற்கான தடைகள் இம் மாவட்டத்திலுள்ள பல இடங்களிலும் படையினரால் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

நகர்ப் பகுதியிலிருந்து கிராமப்பகுதிகளுக்கு வியாபார நோக்குடன் எடுத்துச் செல்லப்படும் அத்தியாவசியப் பொருட்களை ஆரம்பத்தில் தடுத்து நிறுத்திய படையினர் தற்போது மக்கள் தமது தேவைகளுக்கு உணவுப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கும் தடையாக இருக்கிறார்கள். இதனால் மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அரசசார்பற்ற நிறுவனங்கள் பாதுகாப்பு அமைச்சு அனுமதி பெற்று அத்தியாவசிய பொருட்களை எடுத்துச் செல்கின்றபோதும் பெரும் இராணுவ கெடுபிடியின் மத்தியிலே இவற்றை கொண்டு செல்ல வேண்டிய நிலையிலுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மூன்றும் ஈழப்போர் ஆரம்பமானதைத் தொடர்ந்து மட்டக்களப்பில் தமிழ்மக்கள் படையினரின் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தேடுதல் மற்றும் சுற்றிவளைப்புகளின் போது பொது மக்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு வருவதுடன் பல இடங்களில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

படையினரின் இத்தகைய நடவடிக்கையால் மட்டக்களப்பு தமிழ் மக்கள் பெரும் பதற்றத்துடன் தமது வாழ்நாளைக்கழித்து வருகின்றனர்.

ம - ரி

## பலதும் பத்தும்

### துர்க்காபுரம்:

துர்க்காபுரம் மகளிர் இல்லத்தைச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கண்ணும் கருத்துமாகப் பேணி வருகிறாரல்லவா? அங்கு தங்கிப் படிக்கும் மாணவிகளின் பேச்சு, மொழி, இசை ஆற்றல்களின் வளர்ச்சிக்கும் ஊக்கம் தரப்படுகிறது.

ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் நடாத்திய போட்டியில் முதலாம் இடத்தையும் ஆயிரம் ரூபாவையும், யாழ். மாநகராட்சி நல்லூர் உற்சவத்தையொட்டி நடாத்திய போட்டியில் தங்கப் பதக்கத்தையும், உரும்பராயில் நடந்த திருக்குறள் கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்றவர் செல்வி த. தனேஸ்வரி.

அதேபோல - செல்வி வி. வடிவாம்பிகை பல பண்ணிசைப் போட்டிகளிற் பதக்கங்கள் பலவற்றைத் தட்டிக் கொண்டார். செல்விகள் க நளாயினி, க சுமதி, சி. கலைவதனி, சி. சிவாஜினி, க. தயாநிதி, த. கலைவாணி போன்ற பலரும் பல போட்டிகளிற் பரிசுகள் பெற்றனர்.

மகளிர் கலை, பண்பாட்டு வளர்ச்சிக்கு உதவும் நிலையத்திற்குப் பொது மக்கள் ஆதரவு தர வேண்டுமல்லவா?

— மயூரன்

# மீனவர்களை நோக்கி ராணுவம்துப்பாக்கிச்சூடு

(யாழ்ப்பாணம்)

குருநகர் கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது மண்டைதீவு இராணுவத்தினர் நேற்றுமுன் தினம் காலை 5-45 மணியளவில் துப்பாக்கி பிரயோகத்தை மேற் கொண்டனர்.

இதேவேளை கடந்த திங்கள் இரவும் இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர் மீனவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்று மீனவாகள் தெரிவித்தனர். 170-ரி

# ஒரேஇரவில் இரு வழிப்பறிச் சம்பவங்கள்

(ஆனைப்பந்தி)

ஒரே இரவில் இரண்டு வழிப்பறிச் சம்பவங்கள் யாழ் நகர்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. சென்ற 22 ம் திகதி இடம்பெற்ற இச் சம்பவங்கள் பற்றி தெரியவருவதாவது

[4-ம் பக்கம் பார்க்க]

தானியங்கள் நாம் வளர்த்து
தரணியெல்லாம் பசி தீர்ப்போம்!

# இராசி பலன்

26-05-1995

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு வைகாசி -12;

துவாதசி: காலை 11 24 வரை அச்சுவினி: பின்னிரவு 3-05 வரை, அமிர்த சித்தயோகம், பிரதோஷ விரதம், இராகு காலம்: காலை 10-22 முதல் 11-56 வரை.

மேடம்: புதிய சிந்தனை, பணப் புழக்கம், காரிய சித்தி

இடபம்: கடமை தவறுதல் மனக் குழப்பம், அலைச்சல்.

மிதுனம், தொழில் சிறப்பு, வழித் துணை, குடும்ப மகிழ்ச்சி

கடகம்: விவேகமான முடிவு தெய்வ தரிசனம், புகழ்.

சிங்கம்: காரிய தாமதம், குறை கேட்டல், வெறுப்பு.

கன்னி: ஏமாற்றப்படல், வேண்டாத பழி, யோசனை.

துலாம். தாயார் உபதேசம் முயற்சி வெற்றி, பயணம்:

விருச்சிகம்: சயன சுகம், பெரியோர் ஆசி, அதிகாரச் சிறப்பு.

தனுசு: உள்ளக் குமுறல், பணியாளர்கள் துயரம், குடும்பக் கவலை.

மகரம்: கண்டிப்பு, சோற்போர், அமைதி குன்றல்.

கும்பம்: நண்பர் சகவாசம் தொழில்பாராட்டு, உல்லாசம்

மீனம்: ஒதுக்கப்படுதல், பிறர் ஏளனம், மனச் சஞ்சலம்.

— ஜோஸ்யர்

## வெள்ளி விருந்து

### அறப்பணி எது?

நாம் ஓர் உண்மையை நன்கு நினைவில வைத்திருக்க வேண்டும. உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி, ஞானத்தைப் பெறுவதற்கே நாம் செயல் புரிகிறோம் என்பதே அந்த உண்மையாகும். எல்லாச் செயல்களும் பற்றற்றுச் செய்யப்படுமானால், அவைகள் ஞானத்திற்கு வழிகாட்டும்,

சிலர் கர்மத்தில் உள்ள பற்றை விடுவதற்குப் பதிலாகக் கர்மத்தையே விட்டுவிட முயலுகின்றனர். இதன் விளைவு விநோதமாக முடிகின்றது. மக்கள் சேவை, தேசத் தொண்டு போன்ற நற்பணிகளை விட்டுவிடுகின்றனர். ஆனால் — உண்ணல், உறங்குவது போன்ற சுயநலக காரியங்களை விட்டுவிடுவதில்லை.

இதனால் — சுயநலக்காரர்கள் பெருகி, நாடு சீர்கேடான நிலையை அடைகிறது. கீதை காட்டும் முறையில் கர்மத்தைச் சுயநலப் பற்றற்றுப் பிறர் நலம் கருதிச் செய்யும் மக்கள் கடவுளை நாடிச் செல்பவர்கள் ஆகின்றார்கள். ஏழை மக்களுக்குச் சேவை செய்வது பாமரர்களுக்குக் கல்வி கொடுப்பது போன்ற பொதுநலக் கருமங்களால் நாடும் நல்ல நிலையை அடைகின்றது.

— சுவாமி நித்தியானந்தர்.

# அரசினர் பிரசவ விடுதி புத்தூருக்கு மாற்றம்

(பண்டத்தரிப்பு)

ஸ்ரீ லங்கா படையினர் அச்சுவேலிப் பகுதியில் மேற்கொண்டு வரும் பலத்த ஷெல் தாக்குதல்களினால் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை (மகப்பேற்றுப் பிரிவை) பிரசவ விடுதியை புத்தூருக்கு உடனடியாக இடமாற்றம் செய்வதென்று யாழ் சுகாதார திணைக்களம் முடிவு செய்துள்ளது

யாழ் சுகாதார சேவை பதில் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் கே. ரி. சிவபாதம் நிர்வாக உத்தியோகத்தர் திரு. எஸ். மகேந்திரம் ஆகியோர் கடந்த புதன்கிழமையன்று அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்குச் சென்று நிலைமையை நேரில் அவதானித்தும் அங்கு கடமையாற்றும் ஊழியர்களுடனும் கலந்துரையாடியதை அடுத்து வைத்தியசாலை பிரசவவிடுதியை உடனடியாக புத்தூரில் இயங்கும் புத்தூர் அரச மத்திய மருந்தகக் கட்டிடத்திற்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்வது என்று முடிவு செய்தனர். இதேவேளை வெளிநோயாளர் பிரிவு மட்டும் தொடர்ந்தும் அச்சுவேலியில் செயற்பட்டு வருமெனத் தெரிவிக்கப்பட்டது. 72-ரி

# மூன்றுவது ஈழப்போரில் நாம் முப்பரிமாண வளர்ச்சி கண்டுள்ளோம்

(உடுவில்)

இன்றைய காலகட்டத்தில் தமிழினத்துக்கு போராட்டம் பொருளாதாரம், கல்வி இது மூன்றும் தான் அத்தியாவசியமும் தேவையானதும் ஆகும்

யாழ்ப்பாண மாவட்ட அரசியல் துறை மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ச தணிகைச்செல்வி கந்தரோடையில் நடைபெற்ற போர்க்கால கருத்தரங் கொன்றில் இவ்வாறு கூறினர்.

கந்தரோடை தமிழ்க் சந்தையா வித்தியாலய மாணவர்கள் மத்தியில் அவர் உரையாற்றிய போது மேலும் கூறியதாவது: ஈழப்போர் மூன்றில் நாம் முப்பரிமாண வளர்ச்சி கண்டுள்ளோம். நிலம் கடல் வான்வெளி ஆகிய இடங்களில் எதிரியை எதிர்த்து போராடக் கூடிய திறன் பெற்றுள்ளோம். முப்பரிமாண வளர்ச்சியின் அடுத்த கட்டமாக விடுதலைப் புலிகள் என்ன செய்யப்போகிறார்கள் என்பதை அகில உலகமும் அவதானித்துக் கொண்டிருக்கிறது,

இந்தியப்படை வந்தபோது அதனை வரவேற்ற மக்கள் அதன் நோக்கத்தை புரிந்து கொண்ட பின் அதிர்ந்தனர் இந்தியப்படையை நாம் எதிர்த்து போராடவில்லை என்றால் தமிழினம் சீரகேட்டு அழிந்திருக்கும்'

### தணிகைச்செல்வி

இந்தியப்படையின் நோக்கம் நிறைவேறுமாயின் வட பிரதேசம் இந்திய மாநிலத்தின் ஒரு பகுதியாகி இருக்கும். தலைவரின் தீர்க்க தரிசன நடவடிக்கையால் இவை தவிர்க்கப்பட்டன.

இன்று நாம் எமக்கென ஒரு நீதிமன்றம், காவல்துறை கலைபண்பாட்டு கழகம், பொருளாதார, மாணவர்அமைப்பு போன்ற பல துறைகளை உருவாக்கி இவற்றை இணைத்து பொது நிர்வாக சேவையொன்று ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது என்றார் 109.ரி

# ரயில் நிலைய அதிபர்கள் வேலை நிறுத்த முஸ்தீபு

(கொழும்பு)

புகையிரத நிலைய அதிபர்கள் வேலை நிறுத்தத்தில் குதிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்,

சம்பள உயர்வு உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்துள்ள புகையிரத நிலைய அதிபர்கள் அடுத்த சில தினங்களில் இந்த வேலை நிறுத்த போராட்டத்தில் குதிப்பார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது

தமது கோரிக்கைகளை முன்வைத்து தொழிற் சங்க நடவடிக்கையில் இறங்கிய இவர்கள் அந்த செயற்பாடு வெற்றியளிக்காது போனதையடுத்தே வேலை நிறுத்தத்தில் குதிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்

# சுன்னாகம், கந்தரோடைப் பகுதியில் திருடர்களின் தொல்லை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் திருடர்களின் தொல்லை மிக அதிகரித்துள்ளது.

இரவுநேரங்களில் மக்கள் உறக்கத்தில் இருக்கும்வேளை வளவினுள் நுழையும் இத்திருடர்குழு வீட்டின் உள் பகுதிகளுக்கு ரோச்வெளிச்சத்தைப்பாய்ச்சி வீட்டில் இருப்பவர்களின் உறக்கத்தைப் பார்த்து ஏதாவது பெறுமதிமிக்க பொருள்களைத் திருடிச் செல்கின்றனர்.

இரவில் இடம்பெறும் இச் சம்பவம் கடந்த இருவாரங்களாக இங்கு தினமும் இடம் பெற்று வருவதால் அப்பகுதி மக்கள் நித்திரையின்றி விழிப்புடன் இருக்கும் முயற்சியினைமேற்கொண்டுள்ளதாகவும் நாள் தவறாது ஏதாவது ஒரு வீட்டில் இடம்பெறும் இத்திருடர் தொல்லையால் கந்தரோடை மக்கள் பெரும் பீதியுடனே இரவைக்கழிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவாரம் அப்பகுதியில் பட்டப்பகலில் ஒரு வீட்டிலிருந்து சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தங்கநகைகளும், விலையுயர்ந்த உடுபுடைவைகளும் அப்பகுதியில் நடைபெற்ற கோவில் திருவிழா ஒன்றிற்கு வீட்டுக்காரர் சென்ற வேளையில் இத்திருட்டுப்போயுள்ளன

இதுபற்றி சுன்னாகம் காவல் துறையினருக்கு முறையீடு செய்யப்பட்டது. 90-ரி

# மக்கள் இடப்பெயர்ந்த பகுதிகளில் திருட்டு

(வடமராட்சி)

மக்கள் இடம் பெயர்ந்தகொண்டைமானாற்றுப் பகுதியில் ஆடு மாடுகோழி வெங்காயம் போன்றவை திருட்டுப் போகின்றன:

அண்மையில் வளலாய்ப் பகுதி இராணுவச் ஷெல் தாக்குதலால் இடம் பெயர்ந்துள்ள தொண்டைமானாறு செம்பாடு கெருடாவில் பெரிய கடற்கரை சின்னக் கடற்கரை அரசடி போன்ற பகுதிகளில் அதிகளவில் சிறு சிறு களவுகள் நடைபெறுவதாக தெரிய வருகிறது. 51

# விளையாட்டுப்போட்டிகள் மாணவரின் உடல், உள வளர்ச்சிக்கு உதவுகின்றன

(உடுவில்)

''விளையாட்டு மைதானத்தில் தமது பெயரை நிலை நாட்டிய பலர் உலகத் தலைவர்களாக விளங்குகின்றனர். நாட்டுக்கு நல்ல பிள்ளைகளை உருவாக்கவும் நல்ல கல்லூரிகளை தோன்றச் செய்யவும், மாணவர்களின் உடல், உள ரீதியான வளர்ச்சிக்கும் பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் களம் அமைத்துக்கொடுக்கின்றன.''

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன், இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம் தலைமையில் போட்டிகள் நடைபெற்றன.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட உடுவில் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு சு. இரத்தினராசா, மாணவர்கள் படிக்கும் காலங்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாவிடின் எதிர்காலம் சூனியமாகிவிடும் என்றார்.

போட்டியில் வெற்றியீட்டிய மாணவிகளுக்கான வெற்றிக் கேடயங்களை யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி திருமதி செங்கமலம் தெய்வேந்திரன் வழங்கினார்.

முதலாம் இடத்தை கண்ணகி இல்லமும் (624 புள்ளி), இரண்டாம் இடத்தை அருந்ததி இல்லமும் ($554\frac{1}{2}$ புள்ளி), மூன்றும் இடத்தை லீலாவதி இல்லமும் (505 புள்ளி), நான்காம் இடத்தை தமயந்தி இல்லமும் ($490\frac{1}{2}$ புள்ளி) பெற்றுக் கொண்டன. 109

# தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்க்கு ரூ. 400 கொடுப்பனவு

(கொழும்பு)

நாட்டிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஊக்கக் கொடுப்பனவாக 400 ரூபாவை வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது

தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு அனுப்பிய மகஜர்களின் அடிப்படையிலேயே இவ்வாறு ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மகாபொல கொடுப்பனவு போல இப்பணம் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சி

# நாய்களுக்கு தடுப்பூசி

(கொழும்புத்துறை)

தென்மராட்சிப் பகுதியில் வீட்டு வளர்ப்பு நாய்களுக்கான விசர்நோய்த் தடுப்பு ஊசி மருந்துகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அண்மையில் வந்துள்ளன.

இந்நோய்த் தடுப்பூசிகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள பொது சுகாதார பரிசோதகர் பகுதிகளில் விரைவில் வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு ஏற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. -154

# இடம்பெயர்ந்த 250 குடும்பங்களுக்கு உணவு நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி, வளலாய்ப் பகுதிகளில் அண்மையில் இடம்பெற்ற ராணுவ நடவடிக்கை காரணமாக அச்சுவேலி, பத்தமேனி, கதிரப்பாய் பகுதிகளில இருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக புத்தூர் சோமஸ்கந்த பாடசாலை, நீர்வேலி பரலோக மாதா கோவில் ஆகிய இடங்களில் தங்கியிருக்கும் அகதிகளின் நாளாந்த உணவுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இவ்விரு இடங்களிலும் சுமார் 1500 பேரைக் கொண்ட 250 குடும்பங்கள் தங்கியுள்ளன. இவர்களுக்கு இரண்டு நாள் உணவுகளை மட்டும் றெட்பாணா வழங்கியது. தற்போது இவர்கள் தங்கள்செலவிலேயே உணவுகளைத் தேடவேண்டியுள்ளது. 90-ரி

# ஒரேஇரவில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்றைய தினம் இரவு 9. 10 மணியளவில் லோட்டஸ் சந்தி வழியாக சென்று கொண்டிருந்த நல்லூரடியைச் சேர்ந்த நா. கேதாரம் என்பவரை வழிமறித்த இனந்தெரியாத சிலர் இவரது முகத்தில் ஓங்கி அறைந்து விட்டு அவரிடம் இருந்த 340 ரூபா பணத்தை பொக்கற்றுடனேயே கிழித்தெடுத்துச் சென்றுள்ளனர்.

அதேயிரவு 10. 45 மணியளவில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த புங்குடுதீவைச் சேர்ந்த வே. சுப்பிரமணியம் என்பவரை வழிமறித்த சிலர் இவரைத்தாக்கி கீழே வீழ்த்தி விட்டு 362 ரூபா பணம் மற்றும் கையில் அணிந்திருந்த மோதிரம், கைக்கடிகாரம் என்பவற்றை உருவிக் கொண்டு மறைந்து விட்டனர். 101-ரி

# யாழ். பல்கலைக்கழகத்தில் இந்து நாகரீகத்துறை தனித்துவ வளர்ச்சி பெற்றுள்ளது

(உடுவில்)

''சமயத்தையும் தமிழையும் தம் இரு கண்களைப்போல நாவலர் எவ்வாறு பாதுகாத்து வளர்த்தாரோ அதே போல இன்று அவற்றை யாழ்ப்பாண பல்கலைக்கழகம் பேணி வருகின்றது இங்கே இந்து நாகரிகத்துறை உலகின் எங்குமே இல்லாத அளவுக்கு தனித்துவமாக வளர்ச்சி பெற்று நிற்கின்றது.''

யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியராக உயர்வு பெற்ற கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர் தமக்களிக்கப்பட்ட பாராட்டுகளுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்

யாழ்ப்பாணம் இந்து மத குருமார் ஒன்றியத்தின் சார்பாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை வகித்தார்.

பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணஐயர் மேலும் கூறியதாவது:

எமது பண்பாடு, கலாசாரம், பாரம்பரியங்களுக்கு ஏற்ற சிறப்பை இவ்விழா மூலம் ஏற்படுத்தியுள்ளீர்கள். நாம் செய்து முடிக்கும் எந்தக் கருமத்தையும் இறை அருளாகவே கருத வேண்டும்.

சமூகத்தில் வாழும் பெரியோர்கள், சான்றோர்கள், கல்விமான்கள் எமது கல்வி மேம்பாட்டை மேன்மைப் படுத்தும் நிறுவனமாக பல்கலைக்கழகம் அமைகிறது.

எமது பிரதேசங்களில் இன்று ஒரு பண்பாட்டு சீரழிவு நடைபெற்று வருகிறது.

(5ம் பக்கம் பார்க்க

# யாழ். போதனா வைத்தியசாலைக் குறைபாடு அமைச்சுக்கு முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் கொழும்பில் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தியிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வைத்தியசாலையில் தற்போது நிலவும் குறைபாடுகளைச் சுகாதார அமைச்சு அதிகாரிகளுக்குப் பணிப்பாளர் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

இதனைவிடச் சுகாதார அமைச்சின் உயர் மட்டக் கூட்டம் ஒன்று கடந்த 19ம் திகதி கொழும்பில் இடம் பெற்றதாகவும், இக்கூட்டத்தில் வைத்தியசாலைப் பணிப்பாளரும் கலந்துகொண்டதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. 170 ரி

நல்லூர் கிளை நூலகம்.

# கடும் மழையினுல் மரக்கறி மற்றும் உப உணவுப் பயிர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இம்மாத முற்பகுதியில் பெய்த கடும் மழையினுல் மரக்கறிப் பயிர்கள், உப உணவுப் பயிர்கள், புகையிலை என்பன பெருமளவில் பாதிக்கப்பட்டது தெரிந்ததே.

இந்தப் பாதிப்பு விவசாயிகளுக்குப் பெரும் நஷ்டத்தை ஈட்டிக் கொடுத்திருப்பதாக, யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

ஆகக் கூடுதலாக 350 ஹெக்டெயர் நிலப் பரப்பில் பயிரிட்ட எள் பயிர் முற்றுமுழுதாக அழிந்துள்ளது.

இதைவிட மரக்கறி வகைகள் 90 ஹெக்டெயரிலும், சின்ன வெங்காயம் 25 ஹெக்டெயரிலும், பெரிய வெங்காயம் ஹெக்டெயரிலும், சிறு தானியப் பயிர்களான கௌபீ உழுந்து ஆகியன 64 ஹெக்டெயரிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

புகையிலைச் செய்கை 36 ஹெக்டெயரிலும் பாதிக்கப்பட்டுள்ளது. 170 ரி

## இடைநிறுத்தம்

[யாழ்ப்பாணம்]

சந்நிதியான் ஆச்சிரமச் சைவக்கலை, பண்பாட்டுப் பேரவையால் வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் நடாத்தப்படும் நிகழ்ச்சிகள், ஆலயச் சுற்றுடலில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன. கி

## பிரயாணப்படி நிறுத்தம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான போக்குவரத்துப்படி இம்மாதம் பதின்மூன்றும் திகதி சனிக்கிழமை தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விசேட அலுவல்கள் சம்பந்தமாக முன் அறிவிப்பு வழங்கப்பட்டசல் அதற்கு மட்டும் போக்குவரத்துப்படி வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. -154

## சிற்றூர்தி சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனு வைத்தியசாலையில் கடமையாற்றும் வடமராட்சி பணியாளர்களுக்கான சிற்றூர்தி சேவை கடந்த 24ம் திகதி முதல் காலை 6-45 மணிக்கு புருபொறுக்கி சந்தியில் இருந்து ஆரம்பமாகி மந்திகை சாவகச்சேரி மார்க்கமாக நடைபெற்று வருவதபக வைத்தியசாலை நிர்வாக அதிகாரி ஒருவர் நேற்று தெரிவித்தார் 170-ரி

## 13 தமிழ்க்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கிருஷ்ணன், ஆ. கணேசசர்மா [கொழும்பு மிருதங்கம்], என். ராஜா [மட்டக்களப்பு வாய்ப்பாட்டு], சு. கணேசபிள்ளை [கொழும்பு தவில்], திருமதி. திரிபுரசுந்தரி யோகானந்தன் [கொழும்பு பரதநாட்டியம்], பாரதபபோடி, நாகமணிப்போடி [கன்னன் குடா மரபுக் கலைகள்], கே. கணேஸ் [தலாத்து ஓயா கண்டி], தெளிவத்தை எஸ். யோசப் [புதுலா இலக்கியம்].

க - இ

## யாழ். பல்கலைக்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயங்கள் அன்பும் இறை பக்தியும் கொண்டவையாக திகழ வேண்டும். எமது பண்பாடுகள், சமூக ஒற்றுமைகள் அங்கு நிலைநிறுத்தப்பட வேண்டும். இந்து நாகரிகத்துறை அதற்கு வழிகாட்டியாக அமைய வேண்டும் என்ருர்.

இ-109

## அனுமதியற்ற இறைச்சி விற்பனை கண்டுபிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள பல இறைச்சிக் கடைகளில், தகுதி வாய்ந்த அலுவலரின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படாத ஆடு, மாடுகள் பிரதேசக் கொல்களங்களிலும், வேறு இடங்களிலும் அறுக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருவதைத் தமிழீழ சுகாதார சேவைப் பகுதியினர் கடந்த வாரம் கண்டுபிடித்துள்ளனர்.

இவ்வாறு கால்நடைகள் அறுக்கப்பட்டு, விற்பனைக்காக வெளிக்காட்டி வைத்திருந்தமை, அனுமதி முத்திரையின்றி அறுத்த கால்நடைகளைக் கொண்டு சென்றமை பல அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நோயுற்ற, அறுக்கத் தகுதியற்ற கால்நடைகளை இறைச்சிக்காக அறுப்பதனைத் தவிர்க்கவும், கால்நடைக் களவாடலை நிறுத்தவும், தகுதி வாய்ந்த அலுவலரினுல் பரிசோதிக்கப்பட்டு அனுமதி வழங்கிய முத்திரையிடப்படாத இறைச்சிகளை விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும். அத்துடன் முறையாகக் குளிரூட்டப்படாத பழைய இறைச்சி வகைகள் விற்பனை செய்வது நிறுத்தப்படல் வேண்டுமென தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை தமிழீழ சுகாதார சேவைகள் பணியகத்தில் நடைபெற்ற யாழ். நகர் இறைச்சிக் கடை உரிமையாளர்களின் கலந்துரையாடலின்போது மேற்படி விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது. சிரி

## சுயதொழில் வாய்ப்பு தொழிற்பயிற்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பிரதேசசபையின் பிரதேச சம்மேளனத்தின் நடமாடும் சேவையின் கீழ் பிரதேசபைக்குட்பட்ட பகுதி இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான தொழிற்பயிற்சிகளை அளிக்கும் செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளனர்.

முதற்கட்டமாக நீர்வேலி சிறுப்பிட்டியில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு அளிக்கப்படவுள்ளதாக இப்பயிற்சி நெறி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் தினமும் மாலை 3 மணியில் இருந்து நடைபெறும்.

மூன்றுமாதங்களுக்கு இடம் பெறும் இப்பயிற்சிநெறி நீர்வேலி சிறுப்பிட்டிப்பகுதியில் சுமார் 50 இளைஞர் யுவதிகளுக்கு அளிக்கப்படும்.

இப்பயிற்சிநெறியில் தையல் பயிற்சி, முடி அலங்காரம், ஐஸ்சிங் போன்ற சிறுகைத் தொழில்கள் இடம் பெறவுள்ளது.

## தண்ணீர்த்தாங்கி அமையுங்கள்

(யாழ்ப்பாணம்)

பொம்மைவெளியில் உள்ள வீடமைப்புத் திட்டத்தில் தண்ணீர்த்தாங்கி ஒன்றை அமைத்துத் தருமாறு யாழ். பிரதேசச் செயலரை அப்பகுதிவாழ் மக்கள் கேட்டுள்ளனர்.

இப்பகுதி மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் அளவு போதாமையினுலேயே, தண்ணீர்த்தாங்கி ஒன்றை அமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

இது குறித்து யாழ். மாநகர ஆணையாளருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாகப் பிரதேசச் செயலர் தெரிவித்தார். 170 சி

## நூல் அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம வெள்ளி விழாவை முன்னிட்டு இன்று 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகா வித்தியாலயத்துக்கும், ஜூன் மாதம் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கும் பல நூல்கள் அன்பளிப்புச் செய்யப்படும்.

எதிர்வரும் ஜூன் 12 ஆம் திகதி திங்கட்கிழமை சேவாச்சிரமத்தில் பண்ணிசை வைபவமும் நடைபெறும். -154

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணார்பண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்' யாழ். புங்குடுதீவு ஸ்ரீ பராசக்தி வித்தியாலயம் ஆகியவற்றின் வருடாந்த மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 28ம் ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க. செல்வநாயகம் தலைமையில் நடைபெறும்.

நல்லூர் கோட்ட உதவி கல்விப்பணிப்பாளர் இ. அருளானந்தம் விழாவில் பிரதம விருந்தினரா கலந்து கொள்வார். - 170

## கருவாட்டின் விலை மீண்டும் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் கருவாட்டின் விலை மீண்டும் உயர்ந்துள்ளது.

கடல்வலய தடைசட்டம் அமுலுக்கு கொண்டுவந்ததை தொடர்ந்து மீன்பிடியாதிக்கப்பட்டதை அடுத்து கருவாட்டின் விலையும் உயர்ந்துள்ளது.

தற்போது ஒரு கிலோ பாரை கருவாடு 130 ரூபாவாக விற்கப்படுகின்றது.

முன்னர் இக்கருவாடு 80 ரூபாவாக விற்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. 170-ரி

## தமிழீழ மேம்பாட்டுக் கழக கொடிவாரம்

(உடுவில்)

தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகத்தினரின் கொடி வாரம் மே 30-ஆம் திகதியிலிருந்து ஜூன் 5-ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இக்கொடிவாரத்தின் மூலம் சேகரிக்கப்படும் நிதி ஆசிரியர் வாண்மை விருத்திக்கும் மாணவர் கல்விவளர்ச்சி அறிவு வளர்ச்சிக்கும் பயன்படுத்தப்படுவதாக கல்வி மேம்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அருள் மாஸ்டர் தெரிவித்தார்.

இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற உடுவில் கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் அவர் உரையாற்றினுர்.

கடந்த வருடம் கொடி தினத்தின் மூலம் ஒருலட்சத்து 31 ஆயிரத்து 231 ரூபா சேகரிக்கப்பட்டது,

ஆசிரியர் வாண்மை விருத்திக்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் இந் நிதி ஐந்து மாதகாலத்துக்குப்போதுமானதாக இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்,

யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்திய மாவட்ட உடற்பயிற்சி போட்டி வலைபந்தாட்ட கரபந்தாட்ட போட்டி ஆகியவற்றின் செலவுக்கும் வன்னி மாவட்டத்தில் இருந்து வந்து பங்குபற்றிய ஆசிரியர் கருத்தரங்கு மற்றும் தமிழ்த் திறன் போட்டி போன்றவற்றுக்கும் மேற்படி நிதி பயன்படுத்தப்பட்டதாகவும் அவர் கூறினுர்.

இம்முறை மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட தொகையை கல்வி மேம்பாட்டுக் கழகம் கொடிதினம் மூலம் திரட்ட வேண்டுமென எதிர் பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்' 109:ர

## வைத்திய சாலைக்கு 3பரல் டீசல்

(நெல்லியடி)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் ஜெனரேற்றர் அம்புலன்ஸ் பாவனைக்காக மூன்று பரல் டீசல் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டது.

இவ் வைத்தியசாலையில் நிலவிய டீசல் பற்றுக்குறையை நிவர்த்தி செய்யும் வகையிலே இம் மூன்று பரல் டீசலும் வந்ததாகவும் இவை சுமார் மூன்றுமாத காலத்திற்கே போதுமானதாகுமென்றும் வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன,

## ககரைநகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மைத் தாக்கியதாகவும் இத்தாக்குதலில் ஒரு கடற்படைச் சிப்பாய் பலியானதாகவும், மூவர் காயமடைந்ததாகவும் தாக்குதலை கடற்படையினர் முறியடித்துவிட்டதாகவும், தலைமைச் செயலகம் மேலும் தெரிவித்தது. -வி-இ

## 'சட்டத்தின் திறவுகோல்' வெளிவந்துள்ளது

[யாழ்ப்பாணம்]

தமிழீழ நீதி நிர்வாகத் துறைனரால் வெளியிடப்பட்ட ''சட்டத்தின் திறவுகோல்'' என்னும் சஞ்சிகை வெளிவந்துள்ளது. இதில் தேசியத் தலைவரின் உரையிலிருந்து, எமது பார்வையில், குடியியல் விடயத்தின் முதன்மைகள், நிர்வாகத்தில் தீர்மானம் எடுத்தல், யதார்த்தம் [உண்மைச்சம்பவம்], யூரல்லா நீதிமன்ற விளக்கம், சட்டநூல்களின் அறிமுகம் மற்றும் கேள்வி பதில், கவிதைகள் ஆகிய அம்சங்கள் வெளிவந்துள்ளன.

இவற்றை தமிழீழ மாவட்ட நீதிமன்றங்களிலும், யாழ். நகரிலுள்ள தமிழ்த்தாய், பூபாலசிங்கம், ஸ்ரீகாந் ஆகிய பரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கலைப்பூங்கா

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் கலை பண்பாட்டுப் பிரிவினரின் மாணவர் கலைப் பூங்கா-2 நாளை 27ம் திகதி சனிக்கிழமை மாலை 7 மணிக்கு கிளிப்பனை மததிய கல்லூரியில் வெகுசிறப்பாக இடம்பெற ஏற்பாடாகியுள்ளதாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் கலை பண்பாட்டுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

## கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாள் அதிகரித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் தோல்வி அடையும் படையினர் ஆத்திரமடைந்து முஸ்லிம்களையும் தூண்டிவிட்டு தமிழர்களின் சொத்துக்களை சூறையாடி அவர்களை படுகொலை செய்து வருகின்றனர்.

கடந்த வாரம் மட்டக்களப்பு ஜெயந்திபுரம், இருதயபுரம் பகுதிகளில் இராணுவத்தினர் திடீரென சுற்றிவளைத்து 15க்கும் மேற்பட்ட தமிழர்களை சுட்டு படுகொலை செய்துள்ளார்கள்.

இதேபோன்று திருகோணமலை, மூதூர் கட்டைபறிச்சான் பகுதியில் முஸ்லிம்கள் 24க்கும் அதிகமான தமிழர்களை வெட்டி படுகொலை செய்துள்ளனர். -வி-இ


யாழ்ப்பாண மாநகரசபை

**கட்டாக்காலி மிருகங்களைக் கட்டுப்படுத்துதல்**

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் கட்டாக்காலியான ஆடு, மாடுகளின் நடமாட்டம் அதிகரித்து வருவதாளுல், போக்குவரத்துக்கும், சுகாதாரத்துக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. ஆகவே, உரிமையாளர்கள் அவற்றைக் கட்டி வளர்க்குமாறு அறிவுறுத்தப்படுகின்றுர்கள். இவ் வேண்டுகோளை மீறுபவர்கள் விடயத்தில் மாநகரசபை கட்டளைச் சட்டத்துக்கமைய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்,

வே. பொ. பாலசிங்கம்,
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1995-05-24.

(எ-4949)

# புலிகள் அரசு மோதலில் இதுவரை 11 ஆயிரம் படையினர் பலி

[கொழும்பு[

விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்கும் இடையில் நடைபெறும் மோதலில் இதுவரை 11 ஆயிரம் படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் எண்ணாயிரம் படையினர் காயமடைந்துள்ளனர் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

1983 இன் பின்னர் யுத்தம் தீவிரப்படுத்தப்பட்டதை யடுத்தே படையினர் தரப்பில் சேதம் அதிகமாக இடம்பெற்றது என்றும் அச்செய்திகள் மேலும் தெரிவித்தன. க இ

# அளவெட்டி பகுதியிலிருந்து மக்கள் வெளியேற்றம்

[யாழ்ப்பாணம்[

இராணுவ நடமாட்டம் பற்றிய செய்திகள் வெளியானதைத் தொடர்ந்து அளவெட்டிப் பகுதி மக்கள் பெரும் கலவரமடைந்து குடியிருப்புக்களைவிட்டு இரவோடு இரவாக வெளியேறிச் சென்றனர்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது. இரவு அளவெட்டி பிள்ளையார் கோவில் பகுதியில் இராணுவம் வந்து நடமாடுவதாகக் கேள்விப்பட்ட அப்பகுதி மக்கள் பீதிகொண்டு இரவுச் சாப்பாட்டை முடித்தவர் பாதி முடியாதவர் பாதியாக மூட்டை முடிச்சுகளுடன் அப்பகுதியை விட்டு இரவே வெளியேறினர்.

இரவு அப்பகுதியில் எந்தவித அசம்பாவிதமும் நடக்காததை அடுத்து மறுநாள் காலை மக்கள் தம் இருப்பிடங்களுக்குச் சென்றனர். இ-90

## குருநாகல் அரச அதிபர் தற்கொலை

[கொழும்பு]

குருநாகல் அரச அதிபர் தற்கொலை செய்துகொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தனிப்பட்ட காரணங்களுக்காக இவர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொண்டதாகவும் நேற்றுமுன்தினம் அவரது வாசஸ்தலத்தில் இச்சம்பவம் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் இவரது தற்கொலைக்கான காரணம் பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. சி இ

## கப்பல் பயணிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

ஜூன் மாத இரண்டாவது கப்பலில் பயணம் செய்ய பதிவு செய்த பயணிகள் யாழ் செயலகத்தில் எதிர்வரும் 29-ம் திகதி திங்கட்கிழமை தங்கள் ஆசனத்திற்கான பணத்தை செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. -162-இ

அச்சுவேலி

## அரசினர் வைத்தியசாலை புத்தூருக்கு இடமாற்றம்

[கோப்மாய்]

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை புத்தூருக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

அச்சுவேலியில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை காரணமாகவே இந்த வைத்தியசாலை இடமாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புத்தூரிலுள்ள தனியார் வைத்தியசாலையில் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை இயங்குகிறது.

இதேவேளை அச்சுவேலிப் பகுதியில் இயங்கும் சகல அலுவலகங்களும் ஏற்கனவே இடமாற்றப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படும் கடுமையான ஷெல் தாக்குதல் காரணமாகவே அவை இடமாற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இ 160

புலிபாய்ந்தகல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த சனிக்கிழமை காலை புலிபாய்ந்தகல் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட படையினரை நோக்கியே விடுதலைப் புலிகள் மேற்படி தாக்குதலை நடத்தினர் என தெரிவிக்கப்பட்டது. -க-இ

## தொலைக் கல்வி பயிற்சி இறுதிப்பரீட்சை அடுத்தமாதம்

(கொழும்பு)

ஆசிரியர் தொலைக்கல்விப் பயிற்சி நெறிக்கான இறுதிப் பரீட்சைகள் அடுத்த மாதம் 24-ம், 25-ம் திகதிகளிலும் ஜூலை மாதம் 2-ம் திகதியும் நடைபெறுமென பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் 310 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறவுள்ளதாகவும் 35,000 பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்கு தோற்றவுள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் மேலும் தெரிவித்தார். -க-இ

## இன்றைய உதைபந்தாட்டம்

[யாழ்ப்பாணம்]

வலி-கிழக்கு உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக மைதானத்தில் இன்று நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டிகளின் விபரம் வருமாறு:

முதலாவது போட்டியில் சென் லூட்ஸ் கழகத்தை எதிர்த்து சென். அன்ரனிஸ் கழகம் மோதும். 2வது ஆட்டத்தில் கலைவாணி கழகத்தை எதிர்த்து அறிவொளி கழகம் மோதும் 3வது ஆட்டத்தில் பாடும்மீன் ஏ பிரிவும் - பொற்பதி கழக ஏ பிரிவும் மோதும். வி இ

## இடம்பெயர்ந்த இளைஞர் படையினரால் கைது

(கோப்பாய்)

பலாலியில் இருந்து இடம் பெயர்ந்து ஆவரங்கால்-மேற்கில் வசித்து வந்த இளைஞர் ஒருவர் பலாலி முகாம் படையினரால் பிடித்துச் செல்லப்பட்டார்,

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:- பத்தமேனி காற்தொட்டியடிக்கு அண்மையிலுள்ள கோவா தோட்டத்தில் ஒரே குடும்பத்சேர்ந்த செல்லப்பா, சிவநேசன் (24-வயது), சிதம்பரநாதன் (20-வயது] ஆகியோருடன் ஐந்துபேர் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு பதுங்கி இருந்த இராணுவத்தினர் பாய்ந்து வந்து சிதம்பரநாதன் என்பவரை பிடித்துச் சென்றுள்ளனர்.

இதைக் கண்ட ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர். இது தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடம் உறவினர் முறையிட்டுள்ளனர். -இ-166

## குவைத் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட இலங்கையர்க்கு நஷ்டஈடு

(கொழும்பு)

குவைத் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு நாடு திரும்பிய இலங்கையர்க்கு இன்னும் இரு மாதங்களுக்குள் நஷ்டஈடு வழங்கப்படுமென்று ஐ நா. சபையின் நஷ்டஈடு நிதியம் அறிவித்துள்ளது

முதலில் 25 ஆயிரம்பேருக்கு கட்டம் கட்டமாக நஷ்ட ஈடு வழங்கப்படும். ஆக்க் குறைந்தது 4 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் இவர்களுக்கு வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1990-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் 1991 ம் ஆண்டு மார்ச் மாதம் வரை குவைத்தில் யுத்தம் நடைபெறும் போது 95 ஆயிரம இலங்கையர் குவைத்தில் வேலை செய்துள்ளார்கள்.

யுத்த காலத்தில் இறந்த-படுகாயமடைந்த இலங்கையருக்கு முன்கூட்டியே நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது. தற்போது யுத்த காலத்தில குவைத்தில் தங்கியிருந்தவர்களுக்கும் பின்பு வேலையிழந்து நாடு திரும்பியவர்களுக்குமே நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது. -வி-இ

## யாழ். ஆஸ்பத்திரியில் நீர் விநியோகத் தடங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் அன்றாட தேவைக்கான நீரை நீர்த்தாங்கிகளுக்கு நிரப்பும் பாரிய நீரிறைக்கும் இயந்திரம் கடந்த சில நாட்களாக பழுதடைந்திருப்பதையடுத்து நீர்விநியோகத்தில் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளது.

இந்த இயந்திரம் பழுதடைந்ததையடுத்து தற்போது சிறிய மோட்டர்களினாலேயே நீர்த்தாங்கிகளுக்கு நீர் நிரப்பப்படுகின்றன.

இதேவேளையில் டீசல் பற்றாக்குறையினால் ஏற்பட்டுள்ள மட்டுப்படுத்தப்பட்டுளள மின்சார விநியோகத்தால் குறிப்பிட்ட நேரத்தில் சிறிய மோட்டர்களினால் அன்றாட தேவைக்கேற்ற நீரை தேக்கமுடியாத நிலை உருவாகியுள்ளது

சிறிய நீர்த்தாங்கிகளிலேயே நீரை நிரப்புவதால், பாவனைக்கு வேண்டிய நீரைத் தேக்கிக் கொள்ள முடியாததால் இடையிடையே சில அத்தியாவசிய தேவைகளை செயல்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இ-90

## குடும்ப பதிவு அட்டையில் 'சரியான விபரங்களை பதிவுசெய்ய கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பொதுமக்கள் அனைவரும் தம்மிடம் உள்ள குடும்பப் பதிவு அட்டைகளில் குடும்பத் தலைவரின் முழுப்பெயர், வதிவிட முகவரி குடும்ப உறுப்பினர்கள் பெயர்கள், பிறந்த திகதி தொழில், தொழில் முகவரி என்பன சரியான முழுமையான விபரங்களைக் கொண்டிருப்பதை எதிர்வரும் 15 06-1995க்கு முன்னர் உறுதிப்படுத்துவதுடன் குடும்பத் தலைவரின் பெயர் முழுமையானதாக இருப்பதுடன், தற்போதைய வதிவிட முகவரி பூரணமாக பதியப்பட்டிருத்தல் வேண்டும். அத்துடன் குடும்ப உறுப்பினர்கள் அனைவரினதும் பெயர்கள் முழுமையானதாகவும், பிறந்த திகதி, தொழில், தொழில் புரியும் இடம் என்பன கண்டிப்பாக பதியப்பட்டிருத்தல் வேண்டும் என போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் குடும்பப் பதிவு அட்டைப் பகுதியினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இத்தகைய சரியானமுழுமையான விபரங்களைக் கொண்டிராத குடும்பப் பதிவு அட்டைகள் பாவனைக்கு ஏற்றுக் கொள்ளமுடியாதவையாகும். எனவே பாவனைக்கு உகந்தவை அல்லாத குடும்பப்பதிவு அட்டைகளை தொடர்ந்து வைத்திருப்பதன் மூலம் நீங்கள் எதிர்நோக்கக் கூடிய சிரமங்களை தவிர்க்க 15 06-95 க்கு முன்னர் உங்கள் பதிவுகளை குடும்ப அட்டை பதிவுச் செயலகங்களின் ஊடாக சரி செய்து கொள்ளுமாறு போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவின் குடும்பப் பதிவு அட்டை பகுதியினர் பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றனர்.

தொண்டமானாறு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உபயோகிக்கும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

பலாலி இராணுவத்தினர் யாழ். அரசஅதிபருக்கு நேற்று இதனை அறிவித்தனர். 162-170 இ

யுத்தம்

(-1ம் பக்கத்தொடர்ச்சி)

அமைச்சர் பீரிஸ் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; கடந்த பெப்ரவரியில் பாதுகாப்பு செலவிற்காக 300 கோடி ரூபா ஒதுக்குவது என்று தெரிவிக்கப்பட்ட ஆலோசனை ஏப்ரல் மாதத்திற்கு பிந்திய தற்போதைய நிலையில் பொருத்தமற்றதாக உள்ளது.

1995ம் ஆண்டுக்கான பாதுகாப்பு செலவினத்தை 2472 கோடி ரூபாவாக அரசாங்கம் மதிப்பிட்டுள்ளது.

ஏற்கனவே மதிப்பிடப்பட்ட வரவு- செலவுதிட்ட மதிப்பீடுகள் தற்போது பொருந்துவதாக இல்லை.

பணவீக்கத்தை ஏற்படுத்தாமல் பாதுகாப்பு செலவீனத்தை அதிகரிப்பது சம்பந்தமான திட்டத்தை அரசாங்கம் தயாரித்துள்ளது.

பொதுஅறிவை அடிப்படையாகக் கொண்ட இலகுவான கொள்கைகள் கடைப்பிடிக்கப்படுமென்று அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

வேறு விபரங்கள் எதனையும் வெளியிட அமைச்சர் மறுத்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது க-இ

பலாலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பலாலிக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விமானங்கள் வந்து போகின்றன. ஆனால் வழமையான சேவை இன்னும் ஆரம்பமாகவில்லை.

உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில் ஒரு சில வகையான உணவுப்பொருள்கள் எம்மிடம் தேவையான அளவு கையிருப்பிலுள்ளன. ஆனால் குறிப்பிட்ட ஒரு சில காலத்துக்கே இது போதுமானதாகும். ரின்களில் அடைக்கப்பட்ட இறைச்சி மற்றும் மீன் வகைகளே இவையாகும்.

ஆனால் புதிய உலர் உணவு வகைகளுக்கு தட்டுப்பாடு இருக்கத்தான் செய்கிறது.

எமக்கு தேவையான காய்கறிவகைகளை இங்குள்ள எமது தோட்டங்கள் மூலம் பெற்றுக்கொள்கிறோம்.

கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையகம் தேவையான காய்கறிவகைகளை எமக்கு வழங்க ஏற்பாடுகளை செய்துள்ளது.

எமது படையினர் எந்தக் காலத்திலும் பயிற்சிகளை இடைநிறுத்தாது அவற்றைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வந்தனர், அவர்களது மன உறுதி நல்லதொரு நிலையிலேயே உள்ளது.

எந்த ஒரு நிலையையும் சமாளிப்பதற்கான பயிற்சியும் உறுதியும் எம்மிடம் உள்ளது என்று கூறினர். -இ

## பஸ் விபத்தில் 14 பேர் பலி

(கொழும்பு)

மொறட்டுவையில் நேற்று மாலை இடம்பெற்ற பஸ் விபத்தொன்றில் 14 பேர் பலியாகினர். பலர் படுகாயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது

மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கி வந்த தனியார் பஸ் ஒன்று பாதசாரிகள் மீது மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

விபத்தைக்கண்டு ஆத்திரமடைந்த பொதுமக்கள் பஸ்ஸை தீவைத்துக் கொளுத்தினர். தீ -இ

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு மே மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office under Licence number B/1633613.